# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பழங்கால மக்கள் வாழ்ந்தது.

அ) குகைகளில் ஆ) நகரங்களில்

இ) வீடுகளில் ஈ) மாடிகளில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. வள்ளல் என்ற சொல்லின் பொருள்

அ) உலோபி ஆ) தீயவன் இ) வீரன் ஈ) கொடையாளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. அ, ஆ, இ என்பன.

அ) மெய் எழுத்துகள் ஆ) உயிர் எழுத்துகள்

இ) உயிர்மெய் எழுத்துகள் ஈ) ஆய்த எழுத்துகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. ''அட்டாலும் பால் சுவையில் குன்றாது'' என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல்

அ) மூதுரை ஆ) நாலடியார்

இ) திருக்குறள் ஈ) நல்வழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. அசேலனை வெற்றி கொண்ட தமிழ் மன்னன்

அ) குத்திகன் ஆ) சேனன்

இ) எல்லாளன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. உயிர்க்குற்றெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 12 ஆ) 18 இ) 7 ஈ) 5

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கன்னியாய் வெந்நீர் ஊற்றுக் காணப்படும் இடம்

அ) மன்னார் ஆ) திருகோணமலை

இ) யாழ்ப்பாணம் ஈ) வவுனியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் உயர்திணை

அ) இருக்கை ஆ) குதிரை இ) சிறுவன் ஈ) புறா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. **பழமொழி :-** நீர் அடித்து ____________ விலகுமா.

அ) மண் ஆ) நீ இ) புல் ஈ) நீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. இறுதியாக இலங்கைக்கு வந்த வெளிநாட்டவர்

அ) ஒல்லாந்தர் ஆ) போர்த்துக்கேயர்

இ) பறங்கியர் ஈ) ஆங்கிலேயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. குலசேகரம் வைரமுத்து என்ற இயற்பெயரை உடைய மன்னன்.

அ) பண்டாரவன்னியன் ஆ) கயிலைவன்னியன்

இ) எல்லாளன் ஈ) அசேலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் இடப்பெயர்

அ) பழம் ஆ) மன்னார் இ) ஓடுதல் ஈ) வட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மேழி என்ற சொல் குறித்து நிற்பது

அ) உழவனை　　　ஆ) மாட்டை

இ) வயலை　　　ஈ) கலப்பையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. தமிழர் பண்பாட்டில் தலை சிறந்தது

அ) மானம்　　ஆ) அன்பு　　இ) சினம்　　ஈ) அடக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பின்வருவனவற்றள் இடையின மெய் எழுத்து அல்லாதது

அ) ஞ்　　ஆ) ர்　　இ) ய்　　ஈ) ள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. துட்டகெமுனுவின் தந்தை

அ) காகவனத்தீசன்　　　ஆ) தேவநம்பியதீசன்

இ) காமினி அபயன்　　　ஈ) சூரத்தீசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மடுமாதா தேவாலயம் அமைந்துள்ள இடம்

அ) யாழ்ப்பாணம்　　　ஆ) கொழும்பு

இ) மட்டக்களப்பு　　　ஈ) மன்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கிளிகள் என்ற சொல் குறித்து நிற்கும் பால்

அ) ஆண்பால்　　　ஆ) பலவின்பால்

இ) பெண்பால்　　　ஈ) பலர்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. குளத்தில் ஆமையுடன் வாழ்ந்த பறவைகள்

அ) காகங்கள் ஆ) புறாக்கள்

இ) குயில்கள் ஈ) கொக்குகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. 1815 இல் இலங்கைத் தீவு முழுவதையும் கைப்பற்றியவர்கள்

அ) ஆங்கிலேயர் ஆ) ஒல்லாந்தர்

இ) போர்த்துக்கேயர் ஈ) தமிழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஒரு சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் இடம்

அ) பயனிலை ஆ) எழுவாய்

இ) செயப்படு பொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. "முத்தே பவளமே" எனத் தொடங்கும் நாட்டார் பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ஆ) ஏர்ப்பாடல்

இ) அறுவடைப்பாடல் ஈ) தொழிற்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. முதிரை நிலப்பகுதியை ஆண்ட குறுநில மன்னன்

அ) இரும்பொறை ஆ) செங்கணான்

இ) குமணன் ஈ) பாரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பின்வரும் எழுத்துகளில் நெட்டெழுத்து

அ) உ ஆ) இ

இ) ஏ ஈ) அ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் பொது நிலையம் அல்லாதது

அ) வீடு ஆ) நூல்நியைம்

இ) பள்ளி ஈ) மருத்துவமனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. நீ + ஐ என்பதைச் சேர்த்தால் வருவது

அ) உன்னை ஆ) நீயை

இ) என்னை ஈ) நீங்களை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. போர்வீரர் தங்கி இருந்து போர் செய்யும் இடம்

அ) கோட்டை ஆ) அரண்மனை

இ) பாசறை ஈ) அந்தப்புரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஒருமை, பன்மை என்பன

அ) இடம் ஆ) திணை

இ) பால் ஈ) எண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நாங்கள் எப்போதும்________________ உள்ளவர்களாக வாழவேண்டும்.

அ) செல்வம் ஆ) பொறாமை

இ) வீடு ஈ) ஒழுக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இயக்கரது ஆட்சி நிலவிய இடம்

அ) கல்யாணி ஆ) மணிபல்லவம்

இ) நயினாதீவு ஈ) நாகதீபம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

அதிகாலைவேளை தமது இனிய குரல்களால் இனிய இசையை எழுப்பி எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துவன பறவைகள். பொழுது விடிந்ததை எமக்கு உணர்த்துவன சேவலும் காகமும். கிளியின் பேச்சும் குயிலின் பாட்டும் மயிலின் ஆட்டமும் எங்களைக் கவர்கின்றன. உணவைக் கண்டால் உறவுகளை அழைத்து உண்ணும் காகத்தின் ஒற்றுமை, தொலைத் தொடர்பு அற்ற காலத்தில் தூதாகச் சென்ற புறாக்கள். இவை மாந்தனின் வாழ்க்கையோடு தொடர்புடையவை. மாந்தனால் செய்ய முடியாத புதுமையான கூட்டினைக் கட்டும் தூக்கணாங்குருவி அழகிய தோகையை உடைய ஆண்மயில், காகத்தின் கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சுகளை வளர்ப்பிக்கும் குயில் இவை எல்லாம் எம்மை வியக்க வைக்கின்றன. நீரிலே வாழும் புள்ளினங்களான வாத்து, தாரா, அன்னம், போன்ற பறவைகள் நீரில் நீந்திச் செல்லும் அழகே தனி அழகு.

1. அதிகாலை வேளை இனிய இசை எழுப்பி எம்மை மகிழ்விப்பன எவை?

_______________________________________________

2. எக்காலத்தில் புறாக்கள் தூதாதகச் சென்றன?

_______________________________________________

3. புதுமையான கூட்டினைக் கட்டும் பறவை எது?

_______________________________________________

4. காகத்தின் கூட்டில் முட்டையிடும் பறவை எது?

_______________________________________________

5. நீரில் வாழும் பறவை இனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

### 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. தாயகத்தில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் எது?

___________________________________________

___________________________________________

2. மூடஆமை என்ற பாடலை இயற்றியவர் யார்?

___________________________________________

___________________________________________

3. தமிழரது அமைதிவழிப் போராட்டம் ஏன் ஆயுதப் போராட்டமாக மாறியது?

___________________________________________

___________________________________________

4. தொழிற்பாடல்கள் எப்போது பாடப்படும்?

___________________________________________

___________________________________________

5. பண்பாடு என்றால் என்ன?

___________________________________________

___________________________________________

6. மாமன்னன் எல்லாளனின் சிறந்த குணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

___________________________________________

___________________________________________

7. 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வன்னியை ஆண்ட மன்னன் யார்?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## ஒற்றுமை

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டுவதை | கூட்டத்தை | நீயும் | பூச்சியை | ஒன்றாய் |

காக்கைக் __________________ நீயும் பார் - அது
கரவாது சேர்ந்து உண்பதைக் கவனித்துப் பார்
எறும்புக் கூட்டத்தை__________________ பார்-அவை
எப்போதும் _____________ ஊர்வதைப் பார்
தேனீப் __________________ நீயும் பார் - அவை
சேர்ந்து கூட்டைக் __________________ ப் பார்
உன்னை நீயே உணர்ந்து பார்- என்றும்
ஒன்று சேர நீ மறுப்பதை எண்ணிப்பார்.

புள்ளிகள் 10

5) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நாங்கள் எப்பொழுதும் தூய்மையாக இருத்தல் வேண்டும். தூய்மையான உடைகளையே அணிதல் வேண்டும். வீட்டில் சமைத்த உணவுகளையே உண்ண வேண்டும். நாளும் பழங்கள் உண்பதும் உடலுக்கு நன்மை தரும். நாம் சத்துள்ள உணவுகளை உண்டு தூய்மையாகவும் இருந்தால் எமக்கு நோய்கள் வராது.

புள்ளிகள் 05

## 6) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்களைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற ஒழுங்கில் வகைப்படுத்துக.

ஓடியது , படிப்போம் , வாருங்கள் , கண்டேன் , கூறுங்கள் , நடந்தான்

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |
| | | |

2. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன அடங்குமாறு ஒரு சொல்லியம் எழுதுக.

________________________________________

________________________________________

3. பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்? காலப்பெயர் , குணப்பெயர் இவை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

________________________________________

காலப்பெயர் :- ______________________________

குணப்பெயர் :- ______________________________

4. மெல்லின மெய் எழுத்துகள் எவை?

____________________________________

5. திணை எத்தனை வகைப்படும்? அஃறிணைக்கு இரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 15

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தமிழர் பண்பாடு.

★ தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி நீர் விளங்கிக் கொண்டவற்றைத் தொகுத்து எழுதுக.

★ நீர் சென்ற சுற்றுலா.

புள்ளிகள் 20